தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 001/பேரூ/2023
நாள் 11.02.2023

திரு.V.L.கருப்பசாமி,
வள்ளியூர், திருநெல்வேலி. – முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
வடக்கு வள்ளியூர் தேர்வுநிலை பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர், இராதாபுரம் வட்டம், மறவர் காலனி, கதவு எண்.370 என்ற முகவரியில் வசிக்கும் திரு.V.L. கருப்பசாமி, என்பவரின் 28.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.01.2023 அன்று பெறப்பட்டு 001/பேரூ/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர், இராதாபுரம் வட்டம், மறவர் காலனி, கதவு எண்.370 என்ற முகவரியில் வசிக்கும் திரு.V.L. கருப்பசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சியில் செயல் அலுவலர் மற்றும் அலுவலகத்தில் உள்ள பணியாளர்கள் சேர்ந்து நடைபெற்ற வேலைக்கு PWD, TWAD Board நிர்ணயம் செய்த விலைக்கு 5 மடங்கு அதிகமாக பில் போட்டு வசூல் செய்கின்றனர். செயல் அலுவலர் மற்றும் அலுவலகத்தில் உள்ள பணியாளர்கள் சேர்ந்து பஞ்சாயத்து பணத்தை சட்ட விரோதமாக அவர்கள் தேவைக்கு நிதியிழப்பு செய்து வருகிறார்கள். PWD, TWAD Board–படி எந்த வேலைக்கு எவ்வளவு விலை போட வேண்டும் என்ற விபரம் தெரிந்தும் வள்ளியூர் பஞ்சாயத்து செயல் அலுவலர் மற்றும் பணியாளர்கள் அவர்கள் விருப்பப்படி விலையை அதிகமாக போட்டு பஞ்சாயத்து பணத்தை சட்ட விரோதமாக நிதியிழப்பு செய்து வருகிறார்கள். மேற்படி விபரங்கள் நான் இந்த புகார் மனுவுடன் தாக்கல் செய்து அனுப்பியுள்ள பஞ்சாயத்து வரவு செலவு கணக்குகளைப் பார்த்தாலே தெளிவாக தெரிய வரும்.

வடக்கு வள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சியில் செயல் அலுவலராக சுஷ்மா இருந்து வருகிறார். தலைமை எழுத்தாளராக செல்வி.கார்த்திகா இருந்து வருகிறார். இவர்கள் இருவரும் கூட்டு சேர்ந்து வடக்கு வள்ளியூர் பேரூராட்சியில் அரசு நிதிக்கு பல்வேறு நிதியிழப்புகளை எற்படுத்தி வருகிறார்கள் இதில் வடக்கு வள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சி மன்றத்தின் சாதாரணக் கூட்டம் **29.11.2022** அன்று இப்பேரூராட்சி மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

இதில் அக்டோபர் மாத செலவுச் சீட்டு கணக்கில் நடந்த நிதி இழப்பு பின்வருமாறு

| No. | Date | Bill Rate | Actual |
|---|---|---|---|
| 989 | 06.10.2022 | 9,000 | 1,500 |
| 993 | 07.10.2022 | 8,900 | 2,400 |
| 995 | 07.10.2022 | 9,000 | 3,000 |
| 996 | 07.10.2022 | 8,900 | 2,000 |
| 997 | 07.10.2022 | 9,000 | 3,100 |
| 998 | 07.10.2022 | 9,800 | 3,000 |
| 1006 | 10.10.2022 | 8,800 | 2,400 |
| 1008 | 10.10.2022 | 9,000 | 1,350 |
| 1009 | 10.10.2022 | 9,000 | 3,500 |
| 1010 | 10.10.2022 | 8,900 | 2,700 |
| 1017 | 11.10.2022 | 8,900 | 1,350 |
| 1018 | 11.10.2022 | 8,500 | 1,200 |
| 1021 | 11.10.2022 | 8,900 | 3,100 |
| 1028 | 12.10.2022 | 8,900 | 2,000 |
| 1029 | 12.10.2022 | 8,900 | 4,100 |
| 1031 | 12.10.2022 | 8,900 | 4,100 |
| 1032 | 12.10.2022 | 8,800 | 3,100 |
| 1044 | 13.10.2022 | 8,900 | 2,400 |
| 1045 | 13.10.2022 | 9,400 | 2,600 |
| 1047 | 07.09.2022 | 8,800 | 4,200 |
| 1052 | 14.10.2022 | 8,800 | 2,400 |
| 1054 | 14.10.2022 | 9,000 | 2,900 |
| 1055 | 14.10.2022 | 8,900 | 3,100 |
| 1061 | 17.10.2022 | 8,900 | 2,600 |
| 1062 | 17.10.2022 | 9,000 | 1,600 |
| 1064 | 17.10.2022 | 8,800 | 2,100 |
| 1066 | 17.10.2022 | 8,900 | 1,350 |
| 1071 | 18.10.2022 | 8,800 | 3,100 |
| 1072 | 18.10.2022 | 9,000 | 1,200 |
| 1073 | 18.10.2022 | 8,900 | 3,100 |
| 1074 | 18.10.2022 | 9,000 | 3,200 |
| 1075 | 18.10.2022 | 9,000 | 2,600 |
| 1076 | 18.10.2022 | 8,900 | 2,400 |
| 1085 | 19.10.2022 | 8,500 | 1,500 |
| 1086 | 19.10.2022 | 8,900 | 2,300 |
| 1087 | 19.10.2022 | 9,000 | 2,200 |

| | | | |
|---|---|---|---|
| 1088 | 19.10.2022 | 8,900 | 2,300 |
| 1100 | 20.10.2022 | 9,600 | 1,350 |
| 1101 | 20.10.2022 | 8,800 | 2,650 |
| 1102 | 20.10.2022 | 9,000 | 2,900 |
| 1105 | 21.10.2022 | 9,000 | 3,100 |
| 1106 | 21.10.2022 | 8,900 | 2,800 |
| 1107 | 21.10.2022 | 8,800 | 1,350 |
| 1108 | 21.10.2022 | 9,000 | 2,900 |
| 1109 | 21.10.2022 | 8,900 | 2,800 |
| 1135 | 28.10.2022 | 9,800 | 2,200 |

மேற்கண்ட செயல்பாடுகளைப்போல் செயல் அலுவலர் சுஷ்மா பணிபுரியும் காலகட்டத்தில் பல்வேறு நிதி இழப்புகளை வடக்கு வள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சிக்கு ஏற்படுத்தி வருகிறார். இவர் மீதும் இவருக்கு உறுதுணையாக இருந்து வரும் செல்வி.கார்த்திகா மற்றும் பணியாளர்கள் மீதும், ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 12.01.2023 நாளிட்ட கடிதம் மூலம் வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 24.01.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

''திருநெல்வேலி மாவட்டம் வடக்கு வள்ளியூர் சிறப்புநிலைப் பேரூராட்சியின் செயல் அலுவலர் மற்றும் அலுவலக பணியாளரும் சேர்ந்து பேரூராட்சியில் நடைபெறும் வேலைகளுக்கு அவர்கள் விருப்பப்படி பொதுபணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விலைக்கு 5 மடங்கு கூடுதலாக பில்போட்டு எடுத்ததாக தெரிவித்துள்ளார். மேலும், பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.டி.ஆர்.சுஷ்மா மற்றும் தலைமை எழுத்தராக உள்ள செல்வி.கார்த்திகாவும் பேரூராட்சிக்கு நிதிஇழப்பு ஏற்படுத்தி உள்ளதாக தெரிவித்துள்ளார். இப்பேரூராட்சியில் தலைமை எழுத்தர் பணியிடம் ஏதும் இல்லை. செல்வி.கார்த்திகா என்பவர் இளநிலை உதவியாளரே ஆவார். முறையீட்டாளர் தனது முறையீட்டு மனுவில் 29.11.2022 அன்று நடைப்பெற்ற பேரூராட்சி மன்ற கூட்டத்தில் வைக்கப்பட்ட சில செலவினங்களுக்கான செலவுச்சீட்டுகளின் விபரத்தினை குறிப்பிட்டுள்ளார். முறையீட்டாளரின் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள செலவினங்கள் அனைத்தும் குடிநீர் திட்ட பிரிவில் உள்ள பைப்லைன் உடைப்பு சரிசெய்தல், கசிவுகள் அடைப்பு சரிசெய்தல் மற்றும் பொது நல்லிகள் பராமரிப்பு போன்ற அன்றாடம் ஏற்படும் சாதாரண செலவினங்கள் ஆகும்.

மேலும், தனது மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள செலவின பட்டியலை Bill Rate தொகை மற்றும் (Actual) என்பதையும் பட்டியலிட்டுள்ளார்.

குடிநீர் திட்ட பழுது நீக்க பணிகளுக்கு வருடாந்திர அடிப்படையில் அவ்வபோது ஏற்படும் பழுதுநீக்க பணிகளுக்கு வழங்கப்பட்ட வேண்டிய தொகை குறித்து இப்பேரூராட்சி மன்றத்தின் 19.04.2022—ம் தேதிய சாதாரண கூட்டத்தில் பொருள் எண்.5 ஆக வைக்கப்பட்டு தீர்மானம்

எண்.19—ன்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி குடிநீர் திட்டப்பிரிவில் ஏற்படும் பழுதுகளின் தன்மை, குழாயின் அளவு, குழிதோண்ட வேண்டிய நீளம் முதலிய அனைத்து விபரங்களும் இடம் பெற்றுள்ளது. எனவே, இச்செலவினங்கள் அனைத்தும், பழுதின் தன்மை, குழி தோண்டப்பட வேண்டிய நீளம், குடிநீர் குழாயின் தன்மை மற்றும் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் நேரடியாக களஆய்வு செய்து வேலைக்கு தகுந்தவாறு தொகை வழங்கப்பட்டுள்ளது.

இப்பேரூராட்சியில் 20 இன்ச் விட்டமுடைய 9 கி.மீ தூரமுள்ள பிரதான குழாய் (Pumping Main) மூலமாகவும் 35.05 கி.மீ நீளமுடைய ஏசி மற்றும் பிவிசி பகிர்மான குழாய் மூலமாகவும், 3700 எண்ணிக்கையிலான வீட்டு குடிநீர் இணைப்புகளும், 244 இதர வகை குடிநீர் இணைப்புகளும் மற்றும் 633 எண்ணிக்கையிலான பொது குடிநீர் குழாய் இணைப்புகள் மூலமாகவும் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், 44 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து குழாய்கள் பதிக்கப்பட்டு விசைபம்புகள் மூலம் சின்டெக்ஸ் தொட்டிகளில் நிரப்பப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, குடிநீர் திட்டப்பிரிவில் நீர் அழுத்தம், வேர் அடைப்பு, பாசி படிதல், துருப்பிடித்தல், இற்று போகுதல், பழமை, உப்பு படிவு, கனரக வாகன போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அவ்வபோது பழுதுகள் ஏற்படுவதும் அவைகளை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டியதும் இயல்பானதும், இன்றியமையாததும் ஆகும். முறையீட்டாளரால் எதன் அடிப்படையில் (actual) என தெரிவித்துள்ளார் என்பது புலப்படவில்லை. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் பொதுப்பணித்துறையால் அங்கீகரிக்கப்பட்ட தரப்படுத்தப்பட்ட விலையானது பெரிய அளவிலான குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணிகளுக்கு அதை சார்ந்த பராமரிப்பு செலவுகளுக்கு மட்டுமே பொருத்தமுடையது ஆகும். அவ்வபோது ஏற்படும் சிறிய குடிநீர் திட்ட பழுது நீக்க பணிகளுக்கு அவ்விலையின்படி தொகை அனுமதிக்கப்பட இயலாது என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது. ஏனெனில், பழுதுநீக்க பணிகளுக்கு என அவ்வபோது மதிப்பீடு தயார் செய்து காலதாமதத்தை தவிர்க்கும் விதமாக வருடாந்திர ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் தொகை வழங்கப்பட்டுள்ளது. முறையீட்டாளரது புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் அனைத்தும் நேரில் பார்வையிடப்பட்டு உடனுக்குடன் புகைப்படங்கள் மூலம் ஆவணபடுத்தப்படுகிறது. புகார்தாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள அனைத்து அசல் செலவுச்சீட்டுகளும் மாண்பமை முறைமன்றத்திற்கு பணிந்து காண்பிக்கப்படுகிறது. மேலும், அவைகளின் நகல்களும் இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

புகார்தாரரும், முறையீட்டு மனுதாரருமான திரு.கருப்பசாமி என்பவர் இப்பேரூராட்சியின் பல்வகை வரவுகளில் ஒன்றான பேரூந்து நிலையத்தில் உள்ள ஆவின் பாலகம் நடத்துவதற்கு முகவர் உரிமம் வழங்கப்பட்டதன் அடிப்படையில் கடையை குத்தகைக்கு எடுத்து அனுபோகம் செய்து வந்தவர் ஆவார். இப்பேரூராட்சியின் பேருந்து நிலைய கடைகளை அகற்றி புதிய வணிகவளாகத்துடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு பழைய கடைகளை அகற்றி கொள்ளுமாறு பேரூராட்சி மூலம் முறையாக அறிவிக்கை வழங்கப்பட்டு இதர அனைத்து குத்தகைதாரர்களும் தத்தமது கடைகளை புதிய பேருந்து நிலைய வளாகம் அமைதலுக்கு ஏதுவாக காலி செய்துள்ள நிலையில் இம்முறையீட்டாளரது ஆவின் பாலக விற்பனையாளர் முகவருக்கான உரிமம் ரத்து செய்யப்பட்ட பின்னரும் திரு.வி.எல்.கருப்பசாமி என்பவர் மட்டும் தனது குத்தகை கடையினை காலி செய்ய மறுத்து வந்ததால் காவல்துறை மற்றும் வருவாய் துறை மூலமாக பேரூராட்சிக்கு சொந்தமான இவரது குத்தகை கடை அகற்றப்பட்டது என்பதால் உள்நோக்கத்துடன் செயல் அலுவலர் மற்றும் இளநிலை

உதவியாளருக்கு எதிராக இம்முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார் என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே, புகார் மனுதாரர் முறையீடானது உண்மைக்கு புறம்பானதும், அடிப்படை ஆதரமற்றதும், உள்நோக்கமுடையதாகவும் உள்ளது என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

இம்முறையீடு தொடர்பான கீழ்க்கண்ட விபரப்படியான ஆவணங்கள் மாண்பமை முறைமன்ற நடுவத்திற்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1) இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண்.19, நாள்.19.04.2022.
2) இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண்.191, நாள்.29.11.2022.
3) வடக்குவள்ளியூர் பேரூராட்சி பொது விபர குறிப்பு 2022 – 2023.
4) தொடர்புடைய புகைப்பட ஆவணங்களுடன் கூடிய செலவுச்சீட்டுகள்.
5) ஆவின் பாலகம் அகற்றுதல் குறித்த கோப்பு.

எனவே, மேற்காண் விளக்கத்தினை கனிவுடன் ஏற்றுக் கொள்ளுமாறு பணிந்து வேண்டுகிறேன்'' எனவும் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலரும், 31.01.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.01.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.V.L.கருப்பசாமி, 31.01.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“வடக்கு வள்ளியூர் பேரூராட்சியில் நடைபெறும் வேலைகளுக்கு பொதுப்பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் Scheduled of Rate படி (SoR) பில் தொகை வழங்காமல் குறைந்த அளவில் செலவிட்டு, அதிகத் தொகை வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக 01.09.2022 அன்று பில் எண் 989க்கு உண்மையான விலைப்பட்டியல் ரூபாய் 1500/– ஆகும். ஆனால், வழங்கப்பட்ட தொகை ரூபாய் 9,500/– ஆகும். இது போன்று பல்வேறு பில் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் பேரூராட்சிக்கு பெருத்த நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. இது குறித்து பேரூராட்சியில் புகார் மனு அளித்தும், எவ்வித பதிலும் எனக்கு அளிக்கப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். எனவே மேற்கண்ட பணிகள் குறித்து விசாரித்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், குடிநீர் குழாய்களை பழுது பார்த்தது மற்றும் எவ்வகை குழாய்கள் மற்றும் வால்வுகள் ஆகியவை மாற்றப்பட்டன என்பது குறித்த விவரங்கள் என்னிடம் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலர் 31.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“வடக்கு வள்ளியூர் பேரூராட்சியில் ஏற்படும் பைப்லைன் உடைப்பு சரி செய்தல், கசிவுகளை அடைத்தல் மற்றும் பொது குழாய்கள் பராமரிப்பு போன்ற அத்தியாவசிய பழுதுகளை

சரி செய்வதற்கான சாதாரண செலவினங்களைக்கொண்ட பணிகளை வருடாந்திர அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு அளிக்கப்பட்டது இதற்கான தீர்மானம் 19.4.2022 அன்று பேரூராட்சியால் நிறைவேற்றப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட பணிகளுக்கு பொதுப்பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் Scheduled of Rate படி (SoR) பில் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்கின்ற விவரத்தையும், மேற்கண்ட பணிகள் ரூபாய் 10,000/–க்கும் குறைவான இருந்ததால், அதனை அளவீட்டுப் புத்தகத்தில் ( M Book) பேரூராட்சி அலுவலர்களால் பதிவு செய்வதில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது 24.1.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விரிவான அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், வடக்கு வள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

''திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரை சார்ந்த மனுதாரர் திரு.V.L.கருப்பசாமி என்பவர் தனது 28.12.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில் வடக்கு வள்ளியூர் தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அன்றாட ஏற்படும் குடிநீர் வழங்கும் பைப்லைன் உடைப்பு சரிசெய்தல், பொது நல்லிகள் பராமரிப்பு செய்தல் போன்ற அத்தியாவசிய பணிகளுக்கு பொதுப்பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நிர்ணயித்த செலவின தொகையை விட அதிகமாக பில்போட்டு முறைகேடாக வழங்கியதன் மூலம் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதால், இதற்கு காரணமான பேரூராட்சியின் செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

வடக்கு வள்ளியூர் பேரூராட்சியில் 2022–23 ஆம் ஆண்டு குடிநீர் திட்ட பராமரிப்பு வேலைகள் தொடர்பான சிறு பணிகளை மேற்கொள்ள அவ்வப்போது ஒப்பந்தப்புள்ளி கோராமல் வருடாந்திர அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, 19.04.2022 அன்று பேரூராட்சி கூட்டத்திலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் அங்கீகரிக்கப்பட்டதையும், மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள பட்டியலிட்டுள்ள செலவினங்களும் 29.11.2022 அன்று நடைபெற்ற மன்ற கூட்டத்திலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளதையும் ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

பொதுப்பணி துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட விலையானது பெரிய அளவிலான குடிநீர் குழாய் விஸ்திரிப்பு பணிகளுக்கு பொருந்தும் எனவும், ஆனால் குடிநீர் திட்டப்பிரிவில் நீர் அழுத்தம், வேர் அடைப்பு, பாசிபிடித்தம், துருப்பிடித்தல், இத்து போகுதல், பழமை, உப்பு படிவு போன்ற பல்வேறு காரணங்களால் ஏற்படும் அத்தியவாசிய மற்றும் அவசர பணிகளை வருடந்திர ஒப்பந்ததாரர்கள் மூலம் பேரூராட்சி அலுவலர்களின் நேரடி கண்காணிப்பு வாயிலாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு, புகைப்படங்கள் மூலம் ஆவணப்படுத்தப்பட்டு, பணிகளின் தன்மைக்கேற்ப, பட்டியல் (bill) தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டு வருகிறது என்பதை செயல் அலுவலர் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் “பேரூராட்சியால் மேற்கொள்ளப்படும் குடிநீர் திட்ட பழுது நீக்கப்பணிகள் குறித்த விவரங்களை அளவீட்டுப் புத்தகத்தில் (Measurement Book) பேரூராட்சியால் பதிவுகள் மேற்கொள்ளப்படுவதில்லை” என தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணி மதிப்பீடு செய்தல், ஒப்பந்தப்புள்ளி கோருதல், மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளுக்கு தொழில்நுட்ப பணியாளர்களுக்கு பயன்படும் வகையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறையால் அரசாணை (நிலை) எண். 35 நாள் 10.03.2000–ல் வெளியிடப்பட்ட பொறியியற் கையேட்டில் அத்தியாயம் – IV–ல் அளவீட்டுப் புத்தகத்தை கையாளப்பட வேண்டும் என கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**CHAPTER – IV**

**Measurement of Works and Measurement Book**

4.1 :- All work done shall be measured then and there and payment shall be made atleast once in a month.

In case of small works, however the execution of which runs over only a few weeks, it will be more convenient to measure up and pay for the work once and for all on its completion, and the agreement with the contractors shall provide for this wherever necessary.

எனவே, அனைத்து பேரூராட்சிகளிலும், (Measurement Book) பொறியியற் கையேட்டில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, மதிப்பீடு தயாரித்து அளவீட்டு புத்தகம் முறையாக பதிவுகள் மேற்கொள்ளுதல், கோப்புகளில் பொறியாளரின் ஒப்புதலுடன் பட்டியல் தொகை வெளியிடுதல், போன்ற நடைமுறைகள் மூலம் கோப்புகள் முறையாக கையாள வேண்டும் என அறிவுறுத்தி அனைத்து பேரூராட்சிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்புமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் பேரூராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு வழங்கப்படும் தொகையானது, உண்மை தொகையை விட அதிகமாக ஒப்பளிப்பு செய்யப்படுகிறது என புகாராக தெரிவித்து, ஆனால் தான் குறிப்பிடப்படும் உண்மையான விலைக்கான விவரங்கள் தன்னிடம் இல்லை என்பதை மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக தெரிவிப்பதன் மூலம் போதுமான ஆதாரங்களை தனது புகாருக்கு மனுதாரரால் சமர்ப்பிக்க இயலவில்லை என இம்முறைமன்றம் கருதுகிறது.

வடக்கு வள்ளியூர் தேர்வுநிலை பேரூராட்சியில் 2022–23 ஆம் ஆண்டு குடிநீர் திட்ட பராமரிப்பு வேலைகள் தொடர்பான சிறு பணிகளை மேற்கொண்டதற்கு பேரூராட்சியால் பொதுப்பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிர்ணயித்த Scheduled of Rate படி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை

மூலம் தணிக்கை செய்து 3 மாத காலத்திற்குள் அறிக்கையினை பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.V.L. கருப்பசாமி,
370, மறவர் காலனி,
வள்ளியூர், இராதாபுரம் தாலுக்கா,
திருநெல்வேலி மாவட்டம் – 627 117.

2) செயல் அலுவலர்,
வடக்கு வள்ளியூர் பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்.

3) இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை 600 035.

4) பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.அர்.சி நகர், சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

14/2/23

செயலாளர்

14/2/23

8/9

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032